உ

சிவமயம்.

ஸ்ரீகோயிலூர் மடாலயத்திலிருந்து அனுப்பிய

திருமுகம்.

இஃது

சிதம்பரம்

ப்ரம்மவித்தியாயந்திரசாலையில்

பதிப்பிக்கப் பட்டது.

விய ௵ மார்கழி ௴ 22--உ

உ

சிவமயம்.

ஸ்ரீகோயிலூர் மடாலயத்திலிருந்து அனுப்பிய

திருமுகம்.

இஃது

சிதம்பரம்

பரம்மவித்தியாயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விய ௵ மார்கழி ௴ 22--உ

சிவமயம்.

ஸ்ரீ கணேசாய நமா.

ஸ்ரீகோயிலூர் மடாலயத்திலிருந்து அனுப்பிய திருமுகம்.

அகண்டபரிபூர்ண சச்சிதானந்த ஸ்வரூபரும் சர்வக்ஞதவாதி கல்யாண குணாலங்கிருதரும் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகருஞ் சாலிவாடீஸ்வரி சமேதருமாய் விளங்காநின்ற ஸ்ரீ இராஜசிங்க பரமேஸ்வரருடைய கிருபா கடாட்சத்தினாலே சகோத்தார்களனைவர்க்கும் புகழ், அறம், பொருண் முதலிய சகலசம்பத்தும் பெருக உண்டாவதாகுக.

கோயிலூரென்னும் கழனிவாசலென்றும் வழங்கிவரும் சமீவன க்ஷேத்திரத்தில், பூர்வம் மதுப்பிரியரென்னும் ஒரு ரிஷியானவர் சந்நிதியிலிருககிற மதுபுஷ்கரணியின் தீரத்தில் நெடுங்காலந் தவஞ்செய்ய, அதற்குப் பரமசிவனும் பார்வதிதேவியாரும் திருவுளமகிழ்ந்து ரிஷபாரூடராய்க் காட்சி கொடுத்து அவர் வேண்டிய வரமுந் தந்தருள, அம்மதுப்பிரிய ரிஷியானவர் சிவபெருமானைப்பார்த்து, ஆன்மாக்கள் வழிபாடுசெய்து உய்யும்பொருட்டு உலகமுழுவதும் புகழாநிற்கும் பெருமையெற்ற இந்த க்ஷேத்திரத்தின் கண்ணே அம்பாளோடும் வீற்றிருந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அச்சிவபெருமானும் இதற்கிசைந்து திரிபுவனேஸ்வரரென்றுந் திரிபுவனேஸ்வரியென்றுந் திருநாமம் புனைந்தருளி வீற்றிருந்தனர்.

பின்னர் ஒருகாலத்தில் வீரபாண்டியனென்னும் இராசனானவன் ஆரண்யங்களில வேட்டையாடியபொழுது ஒரு மானானது தப்பி இச்சமீவனத்தின் கண்ணே வந்து மறைய, அவ்வரசனும் அனேகஜன்ம புண்ணிய புஞ்ச பரிபாகவசத்தால் இச்சமீவன க்ஷேத்திரத்தைக்கண்டு அகமகிழ்ந்து வேட்டையாடிவந்த சிரமத்தினால் ஒரு விருக்ஷத்தின் நிழலில் எப்பொழுதுந் தன் கையிலிருக்கிற இராஜசிங்கத்தைத் தன் தலைமாட்டில் வைத்து நித்திரை போயினன்.

அப்பொழுது சிவபெருமானும் அவ்வரசனால் திருப்பணிகளியற்றுவித்துககொள்ளத் திருவுளங்கொண்டு, அவ்வரசனுடைய தலைமாட்டிலிருக்கும் இராஜகட்கத்தை மறைவித்துத் தமது மாயையினால புலியானது ஓர் பிராமணனைப் பிடித்துக்கொள்ள அதற்கு அப்பிராமணன் பயந்து அலறுமபடியான ஓர் லீலையைத் தோற்றுவிக்க அவ்வரசனும் பிராமணன் அலறுகின்ற சத்தத்தினால் விழித்து அப்புலியைச் சேதிக்கும்பொருட்டுத் தன் றலைமாட்டிலிருந்த இராஜகட்கத்தைப் பார்க்க, அஃது காருணையினான் வியாகுலமுற்று அப்புலியைப்பார்த்து உணவொழித்துச் செய்யுந் தவத்தினால் இளைத்த சரீரத்தையுடைய இப்பிராமணனை விட்டு, வேண்டிய உணவுண்டு பருத்திருக்கும் எனது சரீரத்தை உனக்கு உணவாக்கிக்கொள்ளென்று வேண்டிக்கொள்ள, அதற்குப் புலியானது உடன்படாமையினால் அவ்வரசனும் பிராமணனை விடுவிக்கவேண்டுமென்னுங் கருத்தினால் அப்புலியின் வாயிற் றலையைக்கொடுக்க அப்புலியும் மறைந்தது. பிராமணனும் மறைந்தனன் இவ்வாச்சரியத்தைக் கண்ட வீரபாண்டியனும் மனமயங்கிப் பரவசனாகி யிருக்குஞ் சமயத்தில் தேடிவந்த சேனைகளுந் தன்னையடைந்தன. அச்சேனைகளை அரசன் பார்த்து இவ்வாரணியத்தில் ஏதேனும் அற்புதமுண்டானால் சீக்கிரங் கண்டுவாருங்களென்றாக்ஞாபிக்க அவர்களும் அப்படியே நான்குதிசையுந் தேடிவந்து ஓரற்புதமான ஒருசிவலிங்கமானது எழுந்தருளியுளதென விண்ணப்பஞ்செய்ய, அவ்வரசனும் போய்த்தரிசித்து உள்ளன்போடுங்கண்ணீர் வார மயிர்க்குச்செறிந்து துதிசெய்ய. அச்சிவலிங்கத்தினின்றும்சிவபெருமான் மான் மழு சதுர்ப்புஜ காளகண்டாதி சின்னங்களுடையதும், வித்தியாரூபியான பார்வதியை வாமபாகத்திற் கொண்டிருக்கும்பதுமான திவ்விய மங்கள மூர்த்தமாகி ஆவிர்ப்பவித்துத் தரிசனங் கொடுத்து, அரசனே! மஹாலிங்கத்தி னருகேயிருக்கும் இராஜகட்கத்தை எடுத்துககொள்ளென் றருளசெய்து அந்தர்த்தானமாயினர். அவ்வீரபாண்டியனும் சிவபெருமானைக் கண்ட களிப்பினால்பேரானந்தசாகரத்தின் மூழ்கி, ஹரி ஹர பிரமாதிகட்குங்காண்டற்கரிய பெருந்தகையாகிய சிவபெருமானுக்கு தீனனான நம்மிடத்தும் இவ்வளவான பெருங்கருணை யிருந்தது; இஃதென்னே யென்று அடிக்கடி நினைந்து மனங்கசிந்து சரீரபுளகாங்கிதமுற்று மெய்யன்போடும் கெற்பக்கிரகம், அர்த்தமண்டபம் முதலிய அநேகந்திருப்பணிகளியற்

ருவிததனன். அச்சிவபெருமான் வீரபாண்டியனுடைய இராஜகட்
கத்தை மறைத்ததனால இராஜகட்க பரமேஸ்வரரென்றும், பார்வதி
தேவியார் சிவகுப்தன் மனைவியாகிய சுதன்மையென்னுஞ் செட்டிம
பெண்ணுக்கு நெற்காத்ததனால் சாலிவாடீஸ்வரி யென்றுந் திருநாம
ம் புனைந்திருந்தனர்.

வெகுகாலத்தின் பின்னர் இவ்வுலகின் கண்ணுள்ள நம்மனோர்
உய்யும்பொருட்டுக் காரக்குடியென்னுந் திருநகரத்தின்கண்ணே தி
ருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீ முத்துராமலிங்கசுவாமிகளென்று ந
மதாண்டவர் ஒருநாள் நலலான் செட்டியாரை உடன்வர அழைத்
துக்கொண்டு கோயிலூருக்குவந்து இராஜகட்க பரமேஸ்வரரையும்
சாலிவாடீஸ்வரியையுந் தரிசனஞ்செய்து ஊருக்குவரப் பிரயத்தன
ப்படுங்காலையில் மழையானது மிகுந்து விடாது பெய்தமையால் வ
ர இசையாமல அவ்விரவில் அம்மை சந்நிதியிலிருந்த கூரைகொ
ட்டகையில் நித்திரைசெய்யததொடங்க அஃது ஒழுகி யெங்கும் ந
னைந்து சேறாயிருந்ததனால் அவ்விரவு முழுதும் நித்திரையில்லாதி
ருந்து சூரியோதயமான பின்னர் நல்லான்செட்டியாரை ஏவித்தொ
ழில செய்பவரை வரவழைத்து அக்கொட்டகையைப்பிரித்து முன்
போலவே பனை ஓலையினால மேயும்படி உத்தரவுசெய்ய, உடனே
அத்தொழிலாளிகளும் பழைய ஓலைகளைப பிரித்தற்பொருட்டு அக்
கொட்டகைமீதேற அஃது கால்களிற்றிருந்ததனாலேயோ, அல்லது
அம்மையார் இந்த மூர்த்தியைகொண்டு கற்பணியாக்கிக் கொள்ள
த் திருவுளங்கொண்டமையினாலேயோ அடியோடே விழ, நமதா
ண்டவரும் இவ்வாச்சரியத்தைக்கண்டு திருநெலலையம்மையின் திரு
வுள்ளக்குறிப்பை யுட்கொண்டு கற்பணிக்குத்தக்க திரவியஞ் சேகரி
த்து வந்து அங்ஙனஞ் செய்துவிப்பாமென்று கருதிக கோயிலூரினி
ன்றும் தமது நகரமடைந்து சிலநாட்டாமதித்திருந்துவிட ஓர் நாள்
ஆண்டவர் வீட்டினின்றும் வெளியிற்போயிருந்தசமயத்தில திருநெல்
லையம்மையும் ஓர் பிராமணக்கன்னிகை வடிவெடுத்து ஆண்டவர் கிர
கத்துக்கெழுந்தருளி ஆண்டவரது தாயாரைக்கண்டு உனதுமைந்தன்
எங்கேயென்று வினவ, அதற்கு ஆண்டவரது தாயாரும் வெளியே
போயினனென்று இனிமையாய்ச்சொல்லித் திருநெல்லையம்மையின்

திருவுருவான பிராமணக்கன்னிகையின் திவ்விய வுருவத்தைக்கண்டு புளகாங்கிதமுற்றும் பரவசராய் நிற்க, அத்திருக்கோலமமையும் ஆண்டவரது தாயாரைப்பார்த்து உனதுமைந்தன் கோயிலூருக்குச் சுவாமிதரிசனத்திற்கு வந்தபொழுது வெய்யில் மழை இவைகட்கு யாவர்க்கும் உதவியாயிருந்த கொட்டகையைப்பிரித்து அப்பாற்படுத்திவிட்டுக் கற்பணியாகச் செய்துவிப்பேனென்று ஊருக்குவந்தவன் அதற்கு வேண்டிய பிரயத்தனஞ்செய்யாமலிருப்பது உசிதமல்ல. இனி சீக்கிரங் கோயிலூருக்குவந்து அத்திருப் பணியைத் தொடங்கச்சொல்லுதி யென்று திருவாய்மலர்ந்தருளித் தமதாலயத்திற்கு மீண்டனள்.

உடனே ஆண்டவருந் தமது கிரகத்திற்கு வரத் தமது தாயாரும் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லினள். அதுகேட்டு ஆண்டவரும் மயிர்க்குச்செறிந்து கண்ணீர் வார ஆனந்தபரவசராய்ப் பிரமாதிகளாற் கனவிலுங் காண்டற்கரிய ஞானரூபியான அம்மையைக்கனவிற்கண்ட நீயே மகாபாக்கியவதி யென்று தமது தாயாரை வியந்து கொண்டாடி "நன் கடம்பனைப்பெற்றவள் பங்கினன்- தென்கடம்பைத் திருநகரக்கோயிலான்- றன் கடனடியேனையுந்தாங்குதல்-என் கடன்பணிசெய்து கிடப்பதே„ என்று திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரச்செய்யுட் கிலக்கியமாக உடனே அத்திருப்பணிக்காக வேண்டிய திரவியம் சேகரித்துக்கொண்டு கோயிலூருக் கெழுந்தருளித் திருப்பணி செய்யத்தொடங்கி மண்டபம், இராஜகோபுரம், திருமதில் முதலிய அநேகந் திருப்பணிகளை இயற்றுவித்திருப்பதை யாவருங் கண்டுங் கேட்டுமிருக்கலாம். பின்னர் ஆண்டவருடைய ஆஞ்ஞைப்படி இந்த ஸ்தானத்திற் குரிமைபூண்ட பெரியோர்களும் இவ்வாலயத்திருப்பணியைப் பரம்பரையாக நடத்திவருவதையும் யாவரும் அறிந்திருக்கலாம். கருணாநிதியாகிய நமது சிதம்பரசுவாமிகளும் ஆண்டவருடைய கருத்தினை யனுசரித்து யாவர்க்கும் இதத்தையே விரும்பி, இனிநடத்திவரும்படி உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற பிளான்படி முற்றும் நிறைவேற்றவேண்டுவது நமது கடமையாதலின், அதற்குத் திரவியம் அதிகமாக வேண்டியிருக்கின்றதனால் இவ்விடத்தில் நகரத்தார்கள் உபகரித்த பொருள் போதாமையின் அவ்விடத்திற்கு நமது பிள்ளைகளை அனுப்பப்ப

ட்டிருக்கின்றது. நீங்கள் யாவரும் இந்தச் சிவாலயத்திலும், ஆண்டவர் சந்நிதியிலும் அத்தியந்த விசுவாசமும் அபிமானமு முடையவர்களானதால், அத்திருப்பணியானது தடையின்றி நடக்கும்படிக்கு யாவரும் ஒற்றுமையாயிருந்து அன்போடும் சந்தோஷமாய் மிக்க பொருளுதவி செய்தனுப்புவிக்கவேண்டும். அதனுடன் நீங்கள் யாவரும் உங்கள் சொந்தத்தில் ஒரு மாசச்சம்பள வரும்படியை அவ்வம்மையார் திருப்பணிக்கு உபயோகமாகச் செய்யவேண்டும். ஒவ்வொருவருங்கொடுக்கும் பொருள் சொற்பமாயிருந்தாலும், எல்லாத்துலைகளிலும் எல்லாருஞ்சேர்ந்து கொடுப்பதால் பல துளிகள் கூடி ஆறாகி யாவர்க்கும் ஸ்நான பானாதிக்கு யோக்கியமாய் உபகாரப்படுவதுபோல இச்சிவாலயத் திருப்பணிக்கு மிக்க உபகாரமாயிருக்கும். இதை நீங்கள் கட்டாயமாக நினைக்கலாகாது ஏனென்றால், உங்கள் சொந்தக் கிரகத்தைப்பார்க்கிலும் இந்த ஸ்தலத்தில் விசேஷமான அபிமானமுடையவர்களாதலால் நீங்கள் சொந்த தர்மமாக நடத்தவேண்டிய நியாயமிருந்து கொண்டிருப்பதாலும், நீங்கள் சரீர சிரமப்பட்டுச் சம்பாதித்ததற்குத் தக்க பிரயோசனமாக விருப்பதாலும் அவ்விதம் நினைக்கலாகாது.

அதன்றியும் யாம் இவ்வாயுண்முழுதும் திருநெல்லையம்மைக்கே ஊழியஞ்செய்ய விருக்கின்றோம். இந்த ஸ்தானத்தில் என்போல் அபிமானமும் விசுவாசமுமுள்ள நீங்கள் உங்களுடைய ஆயுளில் அவ்வம்மையாருக்கு ஒருமாசம் ஊழியஞ்செய்வது மிகவும் பாரமல்ல.

ஆதலால், திருப்பணி பிளான்படி தடையின்றி நடக்கும்படிக்கு எந்தவிதத்திலும் தொகை குறையாமல் மிக்க பொருளுதவி செய்தனுப்புவீர்களென்று சித்தமாய் நம்புகிறோம்.

சிவாலய தர்மத்திற்கு உதவி செய்பவர்கட்குண்டாகும் புகழையும் புண்ணியத்தையும், அதனால் அவர்களடையும் பெரும்பேற்றையும், ஆண்டவர் மகாத்மியங்களையும் கண்டுங்கேட்டும் நன்றாய் அறிந்திருக்கும் உங்கட்கு நாம் விசேஷமாக எழுதவேண்டியதென்னை! அரசனைக் காணாவிடத்தும் அவன் அனுப்பிய உத்தரவுகளை அவன் நேரே செய்த உத்தரவாக உலகத்தில் யாவரும் பாவித்து அவ்வண்ணஞ்செய்து முடிப்பதுபோல, இத்திருமுகத்திற் கண்ட சங்கதிகளை

யும் நாம் நேரே சொன்னதாக மதித்து அவ்வண்ணஞ்செய்து சந்தோஷமாய் விசுவாசத்தோடுமுடித்தனுப்புவீர்களாக. அங்ஙனஞ்செய்யில் பெரும் புகழையும் புண்ணியத்தையும் பெறுவீர்கள். அதனறியும் அவ்வும்மையாரும் உங்கட்குவேண்டிய சம்பத்தையுந் தருவர். வேண்டிய அநுகூலத்தையுஞ் செய்வர்; நீங்கள் நினைத்த காரியத்தையும் முன்னின்று முடிப்பர். ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளிய சுவானுபவத் திருவாக்கென்னுந் திவ்வியப்பிரபந்தத்தில் ஆதியில பஞ்சாக்கரம் அருள்செய்த குருவணக்கமென்னும் பதிகத்தில "அஞ்சக்கரந்தனை" யென்னுஞ் செய்யுள் முதல பத்துச் செய்யுள்களிலும் "வணிகர்குல ஓஷதிகள் தழையவுபதேசமழை மாருதமொழியுமுகிலே" யென்று திருமகுடஞ் சூட்டப்பெற்ற பெரும்பேற்றினால நீங்கள் எப்பொழுதும் க்ஷேமமாக வாழ்வீர்கள். இராஜகட்க பரமேஸ்வரருடைய விபூதிப்பிரசாதமும், சாலிவாடீஸ்வரியினுடைய குங்குமமும அனுப்பப்பட்டிருக்கிறது. நீங்கள யாவரும் ஆதரத்தோடுந் தரித்துக் கொள்வீர்களாக.

கேட்டுளோர் மகிழச்சொல்வார் கிடைக்குமோ வெமக்குமென்று
வேட்டுளோர் ருபகாரங்கள் விளைத்துளா ரிவருமெய்ய
ஞட்டுளோர் பிறக்கிலிம்மண் ணுயக ராவராகித்
தேட்டுளோர் சிவதன்மங்கள் வாதனை திகழ்தலாலே-

செப்பிய வொப்பிலாத சிவதருமங்க டன்னைத்
தப்பற நினைப்போம்யாமுஞ் சந்திகடோறும் யாரு
மிப்படி யெண்ணுவார்முன் னீட்டிய வினைகளோட்டி
யொப்பிலா வுமையாள்பாகன் புறத்தினி துறைவரன்றே-

ஒப்பிலி யனாதிமுத்த ஞேதிய வேதத்துள்ளும்
செப்பிய சிவதன்மங்கள் சிறந்தநே ரியவேதேறுந்
தப்பிலாப் பலத்தினாலே தடவனா நிகரசான்றோர்
வைப்பென விவற்றைக்கொள்வர் மகற்பலவாஞ்சையாலே-

சற்குருநாதன் துணை.

௴ இங்ஙனம்

மா

உ வீரசேகர ஞானதேசிகர்